# முதல்வர் சிந்திய கண்ணீர்!

கரூரில் நடிகர் விஜய் நடத்திய அறிவில்லா அரசியல் கூட்ட நெரிசலில் சிக்குண்டு மாண்ட உயிர்கள், குழந்தைகள், பெண்கள், ஆண்கள் என 41 பேர். தமிழ்நாட்டின் வரலாற்றில் அப்பழுக்கு ! அவலம்! அலட்சியத்தின் உச்சம் !

இறப்புச்செய்திகள் வர வர நித்திரை தொலைத்து நிம்மதி இழந்து நள்ளிரவில் புறப்பட்டு பாதிக்கப்பட்ட மக்களை பார்க்க மருத்துவமனை சென்று ஒன்றும் அறியா ஒன்றரை வயது குழந்தை மற்றும் இரண்டு சகோதரி சிறுமிகள், அவர்களின் தாய் என இறந்து கிடந்த ஏதுமறியா அப்பாவி மக்களின் உடல்களை பார்த்து மாண்புமிகுவாக இல்லாமல் இரக்கம் கொண்ட மனிதராக அண்ணன் முதல்வர் வடித்த கண்ணீர் தமிழ் தேசத்தையும், இனத்தையும் ஏன் இந்திய தேசத்தையே உலுக்கி விட்டது.

சென்னையிலிருந்து ஓடி வருகிறார் கரூருக்கு முதல்வர். இறப்புக்கு காரணமாக இருந்த கதாநாயகன் நடிகர் விஜய் கரூரில் இருந்து அவசரமாக ஓடி செல்கிறார் சென்னைக்கு. பொறுப்புள்ளவருக்கும் பொறுப்பற்றவருக்கும் இதைவிட உதாரணம் வேண்டுமா !

மாண்ட மக்கள், விஜய் ரசிகர்கள் அடுத்தடுத்து மருத்துவமனைக்கு சடலமாக வந்து கொண்டிருக்கும்போது மருத்துவமனையில் இருந்து கொண்டு என்ன செய்ய வேண்டுமோ அதை செய்து முதல்வரிடம் பேசி உதவி கேட்டு அதிகாரிகளிடம் அணுகி ஆலோசனை கேட்டு உயிருக்கு போராடிக் கொண்டிருந்த மக்களை காக்க வேண்டியவர் ஏன் ஓடினார் ?

சரி.. அரசியலில் அவர்தான் புதியவர் பதட்டத்தோடு சென்றுவிட்டார். இருந்தாலும் அச்செயல் நல்ல தலைமைக்கு அழகல்ல.! அவருக்கு அடுத்து இருக்கக்கூடிய புரட்சிகளை எல்லாம் பற்றி எல்லாம் புரிந்தோ புரியாமலோ பேசத் தெரிந்த அதன் மூலம் இளைஞர்களை தூண்டிட முயன்ற முழு வேட்டி கூட கட்ட தெரியாத முக்கால் டவுசர் போடும் சில்லுண்டிகளில் சிலராவது மருத்துவமனையில் நின்று உதவி செய்திருக்க வேண்டாமா? ஏன் ஒருவரும் நிற்கவில்லை ? குற்றம் மற்றும் பயமா?

பிரெஞ்சுப்புரட்சிக்கு முன்பே பல்லாண்டுகளுக்கு முன்பே ஸ்பாட்டர்க்கஸ் நடத்திய புரட்சியில் இருந்து உலக நாடுகளில் நடந்த புரட்சிகளை எல்லாம் அறிந்த எங்கள் தலைவர் முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்களுக்கு எதிராகவா புரட்சியைப்பற்றி பேசுகிறீர் ? உங்கள் நோக்கம் புரட்சி என்ற பெயரில் அரசுக்கு எதிராக இளைஞர்களை தூண்டி விடுவது. இந்த நேரத்திலும் வெந்த புண்ணில் வேல் பாய்ச்சப்பார்க்கிறீர்களே.!

அதுசரி.. இரவு 10 மணி வரை கூட்டத்திற்கு நேரம் கேட்டு 8.15 மணிக்கே புறப்பட்டு சென்றாரே விஜய் .அவர் இரண்டு மணி நேரம் முன்பாக தனிவானத்தில் ஏறி சென்னை சென்றது எப்படி.? ஏர் டிராபிக் என்று இருக்கும்போது இவர் விமானம் மட்டும் எப்படி முன்பாகவே செல்ல அனுமதிக்கப்பட்டது. இது பா.ஜ.க.வின் துணை இல்லாமல் நடந்திருக்க வாய்ப்பில்லை. இறந்து போனவர்கள் போக உயிருக்கு போராடியவர்களை விஜயின் ரசிகர்கள் ஏதும் அறியா அப்பாவிகள் அவர்கள் தங்களை காண விஜய் வருவாரா என்று ஏக்கத்தோடு பார்த்திருக்க மாட்டார்களா? ஒரு வேளை பார்த்து இருந்தால் விஜய் நம்மை வந்து பார்த்து ஆறுதலாக பேசினார் என்ற மகிழ்ச்சியில் சில உயிர்களாவது பிழைத்திருக்கக்கூடுமே.? இதையெல்லாம் நீங்கள் எங்கே அறியப் போகிறீர்கள் ?



வி.பி.கலைராஜன்
கழக இலக்கிய அணிச் செயலாளர்

முதல்வர் நள்ளிரவில் சென்று உயிருக்குப் போராடி யவர்களை பார்த்து அதிரடி நடவடிக்கை எடுத்ததால் பல்வேறு சிறப்பு மருத்துவர்களையெல்லாம் வரவழைத்து சிகிச்சை தந்ததால் பல உயிர்கள் காப்பாற்றப்பட்டிருக்கிறது. தமிழகமே இதற்கு காரணமான நடிகர் விஜய் ஏன் கைது செய்யப்படவில்லை என்று ஓயாமல் ஊடகங்கள் மூலமாக கேட்டுக் கொண்டிருக்கும் போது ஓரிருவர் கைது செய்யப்பட்டார்கள்.

முதல்வரோ மிகவும் பொறுப்புடன் ஒரு நபர் ஆணையம் அறிக்கையில் யார் குற்றவாளி என்று கூறுகிறதோ அப்பொழுது அவர்களை கைது செய்வோம் என்றும் கூறினார் அங்கிள் என்றும், சார் என்றும் முப்பெரும் விழாவை முப்பதுபேர் விழா என்றும் கேலி பேசியதோடு தி.மு.க.வை ஒழித்தே தீருவேன் என்று ஆதாரமற்ற குற்றச்சாட்டுகளைத்தொடர்ந்து பேசி வந்த நடிகர் விஜயை அரசியல் ரீதியாக முதல்வர் நினைத்து இருந்தால் உடனே கைது செய்திருக்கலாம். அதை செய்தாரா?

விஜய் நடித்த ஒரு படம் திரையிடப்படாமல் தடுத்தார் ஒரு முதல்வர். அவரிடம் சென்று விஜய் கெஞ்சி நின்றாரே அந்த முதல்வர் ஒருவேளை உயிருடன் இன்று இருந்திருந்தால் விஜய் அவரது ஆட்சியைப்பற்றி பேசியிருந்தால் என்ன நடந்திருக்கும் என்பதை நினைத்துப் பார்ப்பாரா ? இந்நேரம் அவர் அரசியல் வாழ்வே அஸ்தமனமாகியிருக்கும்.! அப்படியா செய்தார் நம் முதல்வர்.?

தனது கட்சியின் தொண்டர்கள் உயிரிழப்பதை எந்த தலைவரும் விரும்ப மாட்டார்கள் இதை அரசியல் செய்யாதீர்கள் மக்கள் நலன் பற்றி சிந்திக்க வேண்டும். தனிமனித விமர்சனம் வேண்டாம் என மிகவும் பொறுப்புணர்வோடு முதல்வர் பதில் அளித்தார். அறிஞர் அண்ணா, முத்தமிழ் அறிஞர் கலைஞர், எம்.ஜி.ஆர் தி.மு.க.வில் இருந்த போது நடந்த கூட்டங்களில் இந்த மூவருக்கும் கூடாத கூட்டமா ? அதில் கூட்ட நெரிசலில் யாராவது இறந்ததுண்டா ? காரணம் சரியான கட்டமைப்பு இருந்தது. தொண்டரணி பயிற்சி அளிக்கப்பட்டு மக்களை ஒழுங்கு படுத்திடுவார்கள் தேவையான குடிநீர், உணவிற்கும் வழி வகை செய்வார்கள்.

ஆனால் இப்போது விஜய்க்கு கூடிய கூட்டம் அதில் கால் வாசி கூட்டம் தான். அவர்கள் கேட்ட இடத்தைத்தான் கொடுத்துள்ளார்கள். இன்று எடப்பாடி திமுக அரசு மீது குற்றம் சுமத்துகிறாரே சில நாட்களுக்கு முன்புதான் எடப்பாடி அதே இடத்தில் பேசினார். அப்பொழுது என்ன அசம்பாவிதமாக நடந்தது. அதேபோல் கரூரில் சுமார் இரண்டு இலட்சத்திற்கும் மேற்பட்டோர் முதல்வர் தலைமையில் நடந்த முப்பெரும் விழாவில் இப்படி ஏதும் அசம்பாவிதம் நடந்ததா ? காலதாமதம் ஆனதால் விஜய் கூட்டத்தை நிறுத்தி இருக்கலாமே என்று சிலர் வக்கனையாக பேசுகிறார்கள். இப்படி காலதாமதத்திற்காக ஏதாவது ஒரு கூட்டம் நிறுத்தப்பட்டுள்ளதா. பிறகு ஏன் இந்த வீண் பேச்சு பேசுகிறார்கள்.

கூட்டம் நடத்த வழக்கு போடப்பட்ட போது நீதிமன்றம் விதித்த நிபந்தனைப்படி தான் கூட்டம் நடத்தப்பட்டதா? விதிமீறல் எத்தனை தெரியுமா? ரசிகர்கள் சுற்றி நிற்கும் போது அவர்களில் ஒருவர் அக்கூட்டத்தில் இருந்து செருப்பு வீசியுள்ளார் என்று ஆதாரத்துடன் செந்தில் பாலாஜி கூறியுள்ளாரே இதற்கென்ன பதில் சொல்ல போகிறீர்கள். ? செந்தில்பாலாஜி எப்படி உடனே அங்கு வந்தார் என்று கேட்கிறார்களே அ.தி.மு.க.வை சேர்ந்த எம்.ஆர். விஜயபாஸ்கர் எப்படி அங்கே உடனே வந்தார் என்று யாராவது கேட்டார்களா ? செந்தில் பாலாஜி அந்த தொகுதி எம்.எல்.ஏ. தம்மக்களை காப்பாற்ற உடனே ஓடி வந்துள்ளார் இது என்ன குற்றமா? சமூக விரோதிகளை கூட்டத்தில் உள்ளே புகுத்தி கலவரம் உண்டாக்கப்பட்டதாம் கதை விடுகிறார்கள். இது நம்ப கூடியதா ?

நாமக்கல் ஒன்பது மணிக்கு வர வேண்டியவர் 2.45 மணிக்கு தான் வருகிறார் அதிலேயே கட்டுப்பாடு இல்லாததால் 15 பேர் மருத்துவமனையில் அனுமதிக்கப் பட்டுள்ளனர் என்று தினமணி தலையங்கம் எழுதியுள்ளது. ஆனால் 41 பேர். சரி நாமக்கல்லில் இருந்து கரூர் முக்கால் மணி நேரத்தில் வந்துவிடலாம். விஜய் ஐந்து மணி நேரம் கழித்து 8 மணிக்கு காலதாமதமாக ஏன் வந்தார்? அதுவரை எங்கிருந்தார் ?.காலையிலிருந்து கூடியிருந்த மக்கள் குடிநீர் உணவு இல்லாமல் இரவு 8 மணி வரை காத்திருப்பதை நினைத்துப் பார்த்திருந்தால் விஜய் இவ்வளவு கால தாமதம் செய்திருப்பாரா.? அவ்வளவு நேரம் குழந்தைகளாலும் மற்றவர்களாலும் பட்டினியைத்தாங்க முடியுமா? உயரமானவர்களுக்கு ஆக்சிஜன் கிடைக்கும் கூட்டத்தில் பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எப்படி ஒழுங்கான ஆக்சிஜன்கிடைத்திருக்ககூடும். அதனால்மனச்சோர்வுதான் ! நீர்ச்சத்தும் குறைந்திருக்கும். பெண்களால் இயற்கை உபாதைகளை எத்தனை மணி நேரம் கட்டுப்படுத்தி வைத்திருக்க முடியும்.? இதையெல்லாம் சிந்தித்துப் பார்ப்பதற்கு அவர்கள் என்ன பழுத்த அல்லது முதிர்ந்த அரசியல்வாதிகள் இல்லையே! பணம் வைத்திருந்தால் போதுமா? பக்குவம் இருக்க வேண்டாமா ?

சிறிய கார் அல்லது வேனில் வந்திருந்தால் இந்த நிலை ஏற்பட்டிருக்குமா.? கேரவனில் வந்துள்ளார். இரண்டு பக்கமும்பவுன்சர்கள்எதற்கு?அவர்களால்ஒருவரையாவது காப்பாற்ற முடிந்ததா? அந்த கேரவன் நிற்கவே 2000 சதுர அடி தேவை. அந்த வாகனம் நிறுத்த திடீரென்று விலகி ஓடி வாகனம் நிற்க இடம் தர வேண்டும் இதனாலும் சலசலப்பும், நெருக்கடியும் ஏற்பட்டு மக்கள் மயங்கி விழுந்துள்ளனர். கீழே விழுந்தவர்களால் எழுந்து நிற்க முடியவில்லை. கூட்டம் அவர்கள் மீது ஏறித்தான் செல்ல வேண்டும். காப்பாற்ற நினைப்பவரும் கீழே விழ வேண்டி வரும் அதனால் அவரவர் தங்களை காப்பாற்றிக் கொண்டால் போதும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது. மக்கள் தண்ணீர் கேட்கிறார்கள். விஜயோ ஒரு தண்ணீர் பாட்டிலை கூட்டத்தைப்பார்த்து வீசுகிறார் இது சரியான செயலா? நடிகர் கைப்பட வீசிய தண்ணீர் பாட்டிலை பிடித்திட கூட்டம் முண்டியடிக்காதா ? அதில் எத்தனை பேர் கீழே விழுந்து இருப்பார்கள் இதையெல்லாம் நடக்காமல் காக்க வேண்டிய பொறுப்பு விஜய் கட்சியினருக்குத்தானே.

காவல்துறை 500 காவலர்களை பாதுகாப்புக்கு நிறுத்தி உள்ளது காங்கிரஸ் ஆட்சி காலத்தில் அறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் கலந்துகொள்ளும் கூட்டத்திற்கு இத்தனை காவலர்களையா காங்கிரஸ் ஆட்சி அனுப்பியது? இல்லையே.! அப்படி இருந்தும் தொண்டர்கள் தானே கட்டுப்பாட்டுடன் கூட்டத்தைக் கட்டுப் படுத்துவார்கள் இந்த வேலையை உங்கள் கட்சி ஏன் செய்யவில்லை? விஜய் ரசிகர்களுக்கு அரசியல் பக்குவம் இல்லை. விஜய் அரசியலில் உயர்வதற்கு அவரை பலி கொடுத்து விட்டார்கள். புரட்சிப்பற்றி பேசிய ஒருவர் ஏன் அவசரமாக டெல்லிக்கு ஓடினார். அவர் கரூருக்கு அல்லவா சென்றிக்க வேண்டும். செந்தில் பாலாஜி கரூரில் தானே இருக்கிறார். உங்களுக்கு அங்கு செல்ல துணிச்சல் இல்லை.

இதுவரை தமிழ்நாடு முதல்வர் எடுத்து வரும் நடவடிக்கை பாராட்டத்தக்க முறையில் அமைந்துள்ளது. விஜய் திடீரென்று இரண்டு நாட்கள் கழித்து தனக்கு வேண்டியவர்களை கைது செய்யாதீர்கள் துணிவிருந்தால் என்னை கைது செய்யுங்கள் என்று அறைக்குள் அமர்ந்து கொண்டு சவால் விட்டுள்ளார். சவால் விடுகிற நேரமா இது?. எந்த மக்களை அரசு கைது செய்துள்ளது இந்த நேரத்திலும் அரசியல் செய்ய விரும்பும் உங்களை எண்ணும்போது வேதனையாகத்தான் இருக்கிறது. அரசியல் பிழைத்தோர்க்கு அறம் கூற்றாகும் இதன் அர்த்தம் உங்களுக்கு புரியுமா ? இதற்கு பிறகாவது சவால் பேச்செல்லாம் வேண்டாம்.

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் துபாய் சென்றவர் பயணத்தை விட்டு விட்டு சில மணி நேரங்களில் கரூர் வந்து மருத்துவமனைகளில் உள்ளவர்களை எல்லாம் பார்த்து ஆறுதல் கூறினார் ஆனால் இன்று வாய் பேசும் அண்ணாமலை அன்று இலங்கையில் இருந்தார் சுமார் 34 மணி நேரம்கழித்து தான் கரூருக்கே வந்தார். இவ்வளவு இருக்கும் கரூர் அவரது சொந்த ஊர். அவர்தான் இன்று பொறுப்புள்ளவர் போல் பேசுகிறார்.

இரவில் எப்படி பிரேத பரிசோதனை செய்தார்கள் ? என்று சில அறிவில்லாதவர்கள் கேட்கிறார்கள் ஆனால் இரவில் பிரேத பரிசோதனை செய்யக்கூடாது என்று எந்த சட்டத்திலும் இல்லை.

முத்தமிழறிஞர் கலைஞர் மறைந்தபோது தன் தந்தைக்கு ஒரு தனையனாக, தலைவருக்கு ஒரு தொண்டனாக கழகத் தலைவர் கண்ணீர் வடித்தார். அறிவிலும், அன்பிலும் சிறந்த சீரிய சிந்தனையாளர், மொழி போர்த்தியாகி அண்ணன் முரசொலி செல்வம் திடீரென்று மறைந்த போது அவரது மார்பில் தலை வைத்து எம் தலைவர் கண்ணீர் வடித்ததை நான் கண்டதுண்டு. தனது அண்ணன் மு.க.முத்து மறந்தபோது தம்பியாக கண்ணீர் வடித்தார்.

பேரறிஞர் அண்ணா மறைந்த போது மாணவர் பருவத்தில் இருந்த காலம் அவர் விரும்பியதை வாங்கி கொடுத்து அண்ணாவுடன் பேசி பழகி இருந்ததால் எம் தலைவர் நிச்சயம் கண்ணீர் சிந்திருப்பார். தலைவர் அவர்கள் அறிஞர் அண்ணா மீது வைத்திருந்த பாசத்தால் அது நடந்திருக்கும்.

அதன் பிறகு கழகத் தலைவர் கண்ணீர் சிந்தியது விஜய் உங்கள் கூட்டத்தில் மறைந்தவர்களை சடலமாக பார்த்தபோதுதான் தம் மக்கள் இறந்ததை தாங்கி கொள்ள முடியாமல் கண்ணீர் சிந்தினார். தமிழ்நாடு முதல்வர் கண்ணீர் சிந்தியதை உலகமே பார்த்தது. நெஞ்சம் நிறைந்தவரின் நெஞ்சப்பதற்றத்தினால் தமிழ் இனமே அழுதது. தம்பிகளும் கண்ணீர் சிந்தினர்.! ஊரே உங்களால் ஒப்பாரி வைத்தது. நீங்களோ இந்த தருணத்திலும் சவால் விடுகிறீர்கள். தோள் தட்டும் நேரமல்ல தோழரே.! துவண்டு கிடப்பவரை எழுந்து நிற்க வைக்கும் தருணம் இது.! ஓங்கட்டும் உதயசூரியன் ஆட்சி..! ஒழியட்டும் வீணர்களின் சூழ்ச்சி...! வெல்லட்டும் தலைவர் தளபதி அவர்களின் ஓய்வில்லாப்பணி.



திருவள்ளூர் மாவட்டம் திருத்தணி தொகுதிக்குட்பட்ட ஆர்.கே.பேட்டை வடக்கு ஒன்றியம் அம்மையார் குப்பத்தில் ரூபாய் 65 லட்சம் மதிப்பிட்டில் அரசு ஆரம்ப சுகாதார நிலைய கூடுதல் கட்டிட பணியை மாவட்ட செயலாளர் திருத்தணி எஸ்.சந்திரன், எம்.எல்.ஏ. துவக்கி வைத்தார். உடன் ஒன்றிய கழகச் செயலாளர்கள் பா. சம்பத், சி.என். சண்முகம், பெ. பழனி, மா.ரகு, நிர்வாகிகள் செங்குட்டவன், மோனிஷா சரவணன், வி.ஜி. மோகன், ராமசாமி, சரவணன், கோபால், உலகநாதன், உள்பட கழக நிர்வாகிகள் அரசு அதிகாரிகள் பலர் கலந்து கொண்டனர்

### அமைச்சர் பி.கே.சேகர்பாபு முன்னிலை! ஜெ.பாலமுருகன் தலைமை!

## அம்பத்தூர் கிழக்கு பகுதியில் முன்னேற்றப் பாதையில் முப்பெரும் விழா!

### திருச்சி என்.சிவா எம்.பி – கழக இளம் பேச்சாளர் பா.ஸ்ரீலேகா சிறப்புரை!

சென்னை, செப்.4-

சென்னை கிழக்கு மாவட்ட திமுக இளைஞர் அணி சார்பில், அம்பத்தூர் கிழக்கு பகுதியில், முன்னேற்றப் பாதையில் முப்பெரும் விழாவை முன்னிட்டு "முப்பெரும் தொடர்-12" திராவிட மாடல் உரிமையின் வலிமை. தியாகம் வளர்த்த தத்துவ பெருமை!! எனும் தலைப்பில் அம்பத்தூர், வில்லிவாக்கம் இளைஞர் அணி பயிற்சி பாசறை கூட்டம் 06.10.25, திங்கட்கிழமை அன்று மாலை 06.00 மணியளவில், சென்னை, கொரட்டூர், அக்ரஹாரம், மோகன் கார்டனில் நடைபெறுகிறது.

இப்பயிற்சி பாசறை கூட்டத்தில், சென்னை கிழக்கு மாவட்ட இளைஞர் அணி துணை அமைப்பாளர் ஜெ. பாலமுருகன் தலைமை வகிக்கிறார்.

சென்னை கிழக்கு மாவட்டக்கழக செயலாளரும், இந்து சமய அறநிலையத்துறை (ம) சென்னை பெருநகர வளர்ச்சிக்குழும அமைச்சர் பி.கே.சேகர் பாபு, ஜோசப்சாமுவேல் எம்.எல்.ஏ, அ.வெற்றி அழகன் எம்.எல்.எ, பி.கே. மூர்த்தி எம்.சி, எம்.டி.ஆர். நாகராஜ், டி.எஸ்.பி.இராஜ கோபால் எம்.சி, வே.வாசு, கூ.பீ.ஜெயின் எம்.சி, வானவில் விஜய் முன்னிலை வகிக்கின்றனர்.

ஜி.ஜெ.பிரபு, பா.ஜெகதீஷ், க.வினோத், எஸ்.தனசேகர், ஆர்.டி.சங்கர்நானா, லயன் ஜெ.பி.ஆர்.ரகு, என். பி.எம்.வசந்த், இரவை பிரவு, ம.ஜெகதீஸ்வரன், வெ.மகேந்திரன் வரவேற்கின்றனர்.

இப்பயிற்சி பாசறை கூட்டத்தில் கழக துணைப் பொதுச்செயலாளர் திருச்சி. என்.சிவா எம்.பி - (காலத்தின் தேவை திராவிட தத்துவம்) எனும் தலைப்பிலும், கழக இளம் பேச்சாளர் பா.ஸ்ரீலேகா - (பெண்ணுரிமை பெற்ற பேரியக்கம்) எனும் தலைப்பிலும் உரையாற்றுகின்றனர்.

மேலும் இப்பயிற்சி பாசறை கூட்டத்தில் மேயர் பிரியா ராஜன், ப.தாயகம் கவி எம்.எல்.ஏ, ப.ரங்கநாதன், பி.முனியாண்டி, ஒ.ஏ. நாகலிங்கம், வி.இரமேஷ் (எ) நீலகண்டன் எம்.சி, டாக்டர்.ஏ.பி.பூர்ணிமா, எல்.பி.எப்.மோகன், ஜி.வி. நாகவள்ளி எம்.சி, டாக்டர். ஜி.சாந்தகுமாரி எம்.சி, சுதா தீனதயா ளன் எம்.சி, உஷா நாகராஜ் எம்.சி, கு.கிருஷ்ணமூர்த்தி, து. ஆயிரம்.

மாநில நிர்வாகிகள்: கே.சந்துரு சி.மகேஷ்குமார், கே.எஸ்.இரவிச்சந்திரன், சங்கரி நாராயணன், தமிழன்பிரசன்னா, எஸ்.மணிமுடி, வே.உமாகாந்த் கே. எஸ்.எம்.நாதன், எம்.விஜயகுமார் என்.பி.எம்.ஷேக் அப்துல்லா, பரிதி இளம்சுருதி எம்.சி, மாவட்ட கழக நிர்வாகிகள்: கோ.ஏகப்பன் தேவஜவகர் ஜி.மகாதேவன் புனிதவதி எத்திராசன் இசட். ஆசாத் எம்.சி, மண்டல குழு தலைவர்கள் : கூ.பீ.ஜெயின் எம்.சி, சரிதா மகேஷ்குமார் எம்.சி, ஸ்ரீராமுலு எம்.சி,

பகுதி கழக செயலாளர்கள் வே.வாசு ஐ.சி.எப்.வ. முரளிதரன் எ.நாகராசன், சொ.வேலு வி.சுதாகர் எம். சாமிகண்ணு செ.தமிழ்வேந்தன் எஸ்.இராஜசேகர் எஸ். முரளி இரா.கலைச்செல்வி பொதுக்குழு உறுப்பினர்கள் கோ.மணி எஸ்.பன்னீர் செல்வம் பி.ஜெ. துளசிங்கம் பி.உதயசங்கர் சாவித்திரிவீரராகவன் எம்.இப்ராஹிம் கனி அ.நிர்மலாதேவி. மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள் துணை அமைப்பாளர்கள் நா.துலுக்காணம் ஜி.தாமோதரன் துரைகண்ணன் ராஜேஸ்வரி ஸ்ரீதர் எம்.சி., பி.விஜயகுமார் எம்.பெரோஸ்கான் எம்.விநாயகம் ஆர்.எஸ்.சித்திக் க.பா.பிரதீப்குமார் ம. அசோக்குமார் எல்.சம்பத்குமார் கா.ராஜ்முகமது இரா. வீரமணி.

அம்பத்தூர் தொகுதி மாமன்ற உறுப்பினர்கள் எம்.இ.சேகர் எம்.சி, எஸ். உமா எம்.சி, கே.பொற்கொடி எம்.சி, எம்.கமல் எம்.சி லதாவாசு எம்.சி. அம்பத்தூர் கிழக்கு தெற்கு வடக்கு பகுதி கழக நிர்வாகிகள் து.ஜெகநாதன் பி.ஆர். இளங்கோவன் பா.பொற்செழியன் ரா.லட்சுமிரங்கசாமி மேனாம்பேடு இ. ராமு, மு.நடராஜன் து.செல்வராஜ் ஆர்.கதிரவன் கவிதா செல்லதுரை கு.சங்கர் அ. செல்வம் க.முரளிபாபு க. கதிஜா மா.ரமேஷ்,

வில்லிவாக்கம் கிழக்கு மேற்கு பகுதி கழக நிர்வாகிகள் புரசை டி.சம்பத் டி.தாமோதரன் W.அமுல் நா. அறிவுடை நம்பி ஜெ.எஸ்.பிரபு வி.து.இராம மூர்த்தி பா.இளையா ம. கலைச்செல்வி ஐ.சி.எப். மு.சுரேஷ்பாபு, அம்பத்தூர் கிழக்கு தெற்கு வடக்கு பகுதி வட்ட கழக செயலாளர்கள் மு.சண்முகம் ஆ.சுந்தர்ராஜ் மு.விஜயகுமார் த.வ.லால் த. பிரகாஷ்குமார் சி.சீனிவாசன், நா.நெப்போலியன் இரா.டீக்கா வி.ரவீந்திரன் பு.வீரா வெ.ராதாகிருஷ்ணன் மு.இரகு த. கண்ணபிரான்,

வில்லிவாக்கம் கிழக்கு மேற்கு பகுதி வட்ட கழக செயலாளர் எ.வேதா விக்னேஷ்சீனி வாசன் ச.மனோகரன் கே.பாஸ்கர் சி.தேவராஜ் காஞ்சி.செ.துரை சிட்கோ சேகர் க.சுகுமாரன் மா.அகிலன் பா.ஜானி சொ. முருகேசன் ப.லோகுபாபு கே.எஸ்.பாபு. அம்பத்தூர் கிழக்கு தெற்கு வடக்கு பகுதி மாவட்ட பிரதிநிதிகள் கே.செல்வம் கோ.முத்து குமாரசாமி கோ.ராஜ்குமார் ந.குமரவடிவேல் ச.கோதண்டன் கோ.இன்பசேகரன் இ.நடராஜன் ஆர்.விமலன் ஜெ.ஐயப்பன் எஸ்.பரமசிவம் பொ.சேதுராமன்(எ) பொன்சேட்டு ஏ.கே. டி.பாஸ்கர்

பா.மாறன் டி.சுரேஷ் பாபு ஆர்.ஜெயராமன் சோ. மதியழகன் எஸ்.கே.சதீஷ்குமார் எஸ்.எஸ்.சவரிமுத்து எஸ்.எம்.முருகானந்தம் ஏ. வி. தட்சிணாமூர்த்தி பொன்.நவராஜ்ரவி எம். குணசேகரன் ப.மதி ஆ.இரா.அருண் கோ. சேகர் லால் க.ஜீவா எஸ்.பி.அரிகிருஷ்ணன். மா.குப்புசாமி எம்.ஹரிகிருஷ்ணன் பி.வி. மூர்த்தி [எ]அண்ணாதுரை சா. ஜெகநாதன் மு.க.அ. ரியாஸ்முக மது க.சத்தியநாராயணன் எம். இ.சந்தீப் எல்.ஜெய்லான்ஸ் சுந்தர்ராஜன் த.சுரேஷ்குமார் அ. செல்வராஜ். கழக முன்னோடிகள், செயல்வீரர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.

இப்பயிற்சி பாசறை கூட்டத்தில் வட்ட கழக செயலாளர்கள் சீ.லோகநாதன், க. மோகன்குமார் நன்றி கூறுகிறார்கள்.

### அக்.5 மற்றும் 6–ல் மாற்றுத் திறனாளிகள் இல்லத்திற்கே சென்று

## பொது விநியோகத் திட்டப் பொருட்கள் வழங்கப்படும்!

### கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் தகவல்!

சென்னை, அக்.4-

தீபாவளி பண்டிகை முன்னிட்டு, தாயுமானவர் திட்டத்தில் அக்டோபர் 5, 6ல் முதியோர் மாற்று திறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோகத் திட்ட பொருள்கள் விநியோகம் செய்யப்படுகிறது.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் 70 வயதிற்கு மேற்பட்ட முதியோர் மற்றும் மாற்றுதிறனாளிகளின் இல்லத்திற்கே சென்று பொது விநியோ கத் திட்ட பொருள்கள் விநியோகம் செய்யப்பட்டு வருகின்றன.

தீபாவளி பண்டிகை முன்னிட்டு அக்டோபர் மாதத்தின் 5 மற்றும் 6 தேதிகளில் வீடு தேடி குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய உத்தரவிடப்பட்டுள்ளது. இந்த தகவலை அனைத்து நியாயவிலைக் கடைகளிலும் பொது மக்கள் அறியும் வகையில் தகவல் பலகையில் எழுதி வைக்க வேண்டும் என அறிவுறுத்தப்பட்டுள்ளது.

முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தின் கீழ் பயன்பெறும் முதியோர் மற்றும் மாற்றுதிறனாளிகள் இத்திட்டத்தை தவறாமல் பயன்படுத்திகொள்ள வேண்டும் என தெரிவிக்கப் பட்டுள்ளது.

சென்னை மண்டலம் கூட்டுறவுச் சங்கங்களின் கூடுதல் பதிவாளர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



சென்னை மாநகராட்சி மண்டல 11 – 153வது வார்டில் சாந்தி ராமலிங்கம் எம்சி.முன்னிலையில் உங்களுடன் ஸ்டாலின் நிகழ்ச்சி நடைபெற்றது. நிகழ்ச்சியில் மதுரவாயல் சட்டமன்ற உறுப்பினர் காரம்பாக்கம் கணபதி, மண்டல குழு தலைவர் நொளம்பூர் ராஜன், மாவட்ட பிரதிநிதி கோ.ராமலிங்கம் உள்ளிட்ட அனைத்து கழக நிர்வாகிகள் பங்கேற்றனர்.



பெருநகர சென்னை மாநகராட்சி, மதுரவாயல் சட்டமன்ற தொகுதி, 151வது வார்டு அரசு பெண்கள் மேல்நிலைப் பள்ளி மாணவிகள் பங்களிப்பில் நடைபெற்ற நாட்டு நலப்பணித் திட்ட நிகழ்ச்சியில் 151வது வார்டு மாமன்ற உறுப்பினரும், சென்னை தெற்கு மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளருமான ச.சங்கர் கணேஸ் எம்.சி. ஏற்பாட்டில் மாணவிகளை உற்சாகப் படுத்தும் விதமாக பரத நாட்டியம்,பாட்டு பாடுதல், மரக்கன்றுகள் நடுதல் போன்ற நிகழ்ச்சிகள் நடைபெற்றன.விழாவில் அனைவருக்கும் அறுசுவை உணவு வழங்கப்பட்டு நாட்டு நலப்பணி திட்டம் நிறைவு பெற்றது. நிகழ்வில் ஆசிரியை பி.எஸ்.ஹரிபா, ஜெகதீஸ்வரி உள்ளிட்ட தூய்மை பணியாளர்கள் கலந்து கொண்டு சிறப்பித்தனர்.